# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

| | | | | |
|---|---|---|---|---|
| **இஸ்லாம்**<br>**தரம் - 11** | **மூன்று மணித்தியாலங்கள்**<br>**10 நிமிடங்கள்** | **16** | **T** | **I,II** |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .

(3) உமக்கு வழங்கப்பட்டடுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி – 1

1. இஸ்லாத்தின் நம்பிக்கை தொடர்பான கற்கைக்கு வழங்கப்படும் பெயர்
   1.இல்முல்மீராஸ் 2. இல்முல் அகாயித் 3. இல்முல் ஜினாயத் 4. தஸ்கியா

2. பனூா இஸ்ரவேலர்கள் எழுபத்தொரு பிரிவுகளாகப் பிரிந்தனர். எனது சமுதாயம் ….. பிரிவுகளாகப் பிரிந்து விடுவர் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.
   1.70 2. 71 3. 72 4. 73

3. குப்ர் என்ற சொல்லின் மொழிக்கருத்து யாது?
   1.மறைத்தல் 2. கூட்டுச்சேர்தல் 3. நாஸ்திகம் 4. நயவஞ்சகம்

4. வரலாற்றில் தோன்றிய பெண் போலி நபி
   1.அஸ்வதுல் அன்ஸி 2. முஸைலமா 3. ஸஜாஹ் 4. துலைஹா

5. அல்லாஹ்வின் கத்ரை ஏளனப்படுத்தியதற்காக கசையடி வழங்கிய கலீபா
   1.உஸ்மான் (ரழி) 2. உமர் (ரழி) 3. அலி(ரழி) 4. அபூபக்ர் (ரழி)

6. பின்வருவனவற்றுள் சாதாரண நஜீஸிற்கு உதாரணமாக அமைவது.
   1.இரத்தம் 2. நாய் 3. பன்றி 4. இரண்டுவயதுக்குட்பட்ட ஆண்குழந்தையின் சிறுநீர்

7. வேதமும் ஸுஹுபுகளும் வழங்கப்பட்ட நபி யார்?
   1.ஈஸா(அலை) 2. இப்ராஹீம் (அலை) 3. மூஸா(அலை) 4. தாவூத் (அலை)

8. 40 மாடுகள் வைத்துள்ள ஒருவர் ஸகாத் வழங்கவேண்டிய அளவு
   1. 1 பசுமாடு 2. 1 காளைமாடு 3. 2 பசுமாடு 4. 2 காளைமாடு

9. விவகாரங்களில் தலையாயது இஸ்லாமாகும். அதன் தூண் …………ஆகும்.
   1.நோன்பு 2. ஸக்காத் 3. ஹஜ் 4. தொழுகை

10. தொழாதவர்கள் நுழையும் நரகத்தின் பெயர்
    1. ஹுதமா 2. ஸகர் 4. ஹாவியா 4. ஜஹன்னம்

11. பித்ரா நிறைவேற்றப்பட வேண்டிய நாள்
1. துல்ஹஜ் 10  2. ரஜப் 27  3. ஸவ்வால் 1  4. முஹர்ரம் 10

12. "நான் வயிறார உண்டால் ஏழைகளின் பட்டினியை மறந்து விடுவேன் என அஞ்சுகின்றேன்' என்னும் கூற்றுடன் தொடர்புடைய நபி யார்?
1. முஹம்மது நபி(ஸல்)  2. மூஸா(அலை)  3. தாவூத்(அலை)  4. யூசுப் (அலை)

13. தஸ்கிய்யாவின் மூலம் இஸ்லாம் எதிர்பார்க்கும் உள்ளம் யாது?
1. நப்ஸுல் லவ்வாமா  2. நப்ஸுல் முத்மஇன்னா
3. நப்ஸுல் அம்மாரா  4. முஜாஹததுன் நப்ஸ்

14. நற்பண்புகளைக்குறிக்கப் பயன்படுத்தப்படும் அரபுச் சொல் அல்லாதது.
1.ஹல்க்  2. குலுக் ஹஸன்  3. அக்லாக்ஹஸனா  4. ஆதாப்

15. ஹஜ் நிறைவேற்றப்பட வேண்டிய கால எல்லை
1. துல்ஹஜ் 10 - 13 வரை  2. துல்ஹஜ் 8 - 13 வரை
3. துல்ஹஜ் 01 - 10 வரை  4. துல்ஹஜ் 6 - 10 வரை

16. இஸ்லாத்தின் இரண்டாவது புனிதத்துவம் பெற்ற மஸ்ஜிதாக அமைவது
1. மஸ்ஜிதுல் ஹராம்  2. மஸ்ஜிதுல் அக்ஸா 3. மஸ்ஜிதுன் நபவி  4. மஸ்ஜிதுல் குபா

பின்வரும் பதங்களைக் கருதுக

A – முஸாரகா  D – ழிஹார்  G – நிகாஹ் முத்ஆ
B – மஹர்  E – ரஹ்ன்  H - இஜாரா
C – கபீலா  F – அஸபீயா  I – வலீமா

17. மேலே கூறப்பட்டவற்றுள் இஸ்லாமிய பொருளாதாரத்துடன் தொடர்புடைய சொற்தொகுதி
1.BEI  2. CDE  3. AFH  4. AEH

18. மேலே கூறப்பட்டவற்றுள் இஸ்லாமிய திருமணத்துடன் தொடர்புடைய சொற்தொகுதி
1.BDG  2. BDI  3. CDI  4. DGI

19. மேலே கூறப்பட்டவற்றுள் ஜாஹிலிய்யாக் காலத்துடன் தொடர்புடைய சொற்தொகுதி
1.CFG  2. CDI  3. BFG  4.AFH

20. "நீங்கள் அளந்தால் (நிறுத்தால்) பூரணமாக அளவுங்கள் : சரியான எடையைக்கொண்டு நிறுங்கள் "என்னும் கூற்று
1.அல்லாஹ்வின் கூற்று  2. நபி(ஸல்) அவர்களின் கூற்று
3. இமாம் ஷாபி அவர்களின் கூற்று  4. அலி (ரழி) அவர்களின் கூற்று

21. சிசு உருவாக்கம் பற்றிய அல்குர்ஆனின் கருத்தை ஆய்வு மூலம் உறுதிப்படுத்தியவர் யார்?
1.மைக்கல H.ஹாட்  2. வீர மந்திரி  3. அலி இப்னு ஸீனா  4. பேராசிரியர் கீத்மோர்

22. இஜ்மா உஸ் ஸரீஹ் என்பது வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.
1. இஜ்மா உஸ் ஸுகூதி  2. இஜ்மா உல் அக்ஸரிய்யா
3. இஜ்மா உல் கவ்லி  4. இஜ்மா உல் முரக்கப்

23. கியாஸின் அர்க்கான்களுள் பொதுப்பண்பை குறிப்பது
1. அஸ்ல்  2. இல்லத்  3. பரஉ  4. ஹுக்ம்

24. முதன்முதலில் ஹதீஸை நூலுருப்படுத்திய கலீபா யார்?
   1. உமர் இப்னு அப்துல் அஸீஸ்   2. அபூபக்ர்(ரழி)
   3. உமர் (ரழி)   4. உஸ்மான்(ரழி)

25. ஒருவர் இஜ்திஹாத் செய்து அவரது இஜ்திஹாத் சரியாக அமைந்தால்
   1. அவருக்கு ஒரு கூலி உண்டு   2. அவருக்கு மூன்று கூலிகள் உண்டு
   3. அவருக்கு நான்கு கூலிகள் உண்டு   4. அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு

26. "இமாமுல் மதீனா" எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்
   1. இமாம் அபூஹனீபா   2. இமாம் மாலிக்
   3. இமாம்ஷாபி   4. இமாம் அஹ்மத்

27. இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக தனித்துவமான நாணயமொன்றை அச்சிட்டு வெளியிட்ட கலீபா
   1. அபூபக்கர் (ரழி)   2. உஸ்மான் (ரழி)
   3. உமர் (ரழி)   4. அலி (ரழி)

28. த ஃவாவிற்கான முதற்கட்டளை இடம்பெற்றுள்ள ஸுறா
   1. ஸுறா முத்தஸ்ஸிர்   2. ஸுறா அலக்
   3. ஸுறா கஹ்ப்   4. ஸுறா லுக்மான்

29. எந்த மன்னனின் ஆட்சிக்காலத்தில் நான்கு முஸ்லிம்கள் வணிக ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர்
   1. இரண்டாம் இராஜசிங்கன்   2. மகாபராக்கிரமபாகு
   3. விஜயபாகு   4. பண்டுகாபய மன்னன்

30. அறிஞர் சித்திலெப்பை அவர்களால் வெளியிடப்பட்ட நாவல் எது?
   1. முஸ்லிம் நேசன்   2. ஞானதீபம்
   3. சீறாப்புராணம்   4. அசன்பே சரித்திரம்

- 31 தொடக்கம் 33 வரையான வினாக்களை **x** நிரலுக்கு ஏற்ப **y** நிரலுடன் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவுசெய்க.

31.

| X | Y |
|---|---|
| 1. இமாம் அபூஹனீபா | **A**. மதீனா |
| 2. இமாம் மாலிக் | **B**. கூபா |
| 3. இமாம் ஷாபி | **C** பக்தாத் |
| 4. இமாம் அஹ்மத் | **D**. பலஸ்தீன் |

1. ABCD   2. BDCA   3. BADC   4.CDAB

32.

| X | Y |
|---|---|
| 1. மக்கா வெற்றி | **A**. கி.பி 622 |
| 2. அகபா உடன்படிக்கை | **B**. ஹி - 8 |
| 3. மதீனா சாசனம் | **C**. ஹி - 6 |
| 4. ஹுதைபிய்யா உடன்படிக்கை | **D**. நு - 11 |

1. ABCD   2. BDAC   3. ACBD   4. BCAD

33. X | Y

| X | Y |
|---|---|
| 1. தக்வா | **A**. பொறுப்புச்சாட்டுதல் |
| 2. வரஉ | **B**. பேணுதல் |
| 3. தவக்குல் | **C**. பற்றற்ற வாழ்வு |
| 4. ஸுஹுத் | **D**. இறையச்சம் |

1. DBAC  2. ABCD  3. BCDA  4. BDCA

34. ஜும்ஆத் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஒருவர் மயங்கி விழுந்தார். அவருக்குப் பக்கத்தில் தொழுது கொண்டிருப்பவர் முதலில் செய்ய வேண்டியது யாது?
1. தொழுகையை நிறுத்துமாறு இமாமுக்கு சைகை செய்தல்
2. தனது தொழுகையை முழுமையாக நிறைவேற்றி விட்டு அவருக்கு உதவி செய்தல்
3. வேறு யாரேனும் உதவட்டும் என்றிருத்தல்
4. தனது தொழுகையை விட்டு விட்டு அவருக்கு உதவி செய்தல்

35. தற்போதைய ஹிஜ்ரி ஆண்டு
1. 1445  2. 1446  3. 1447  4. 1448

36. தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்குரிய இத்தாக் கால அளவு
1. 1 மாதம்  2. 3 துப்பரவுக்காலம்
3. 4 மாதமும் 10 நாட்களும்  4. குழந்தை பிறக்கும் வரை

37. ‘‘புதூஹுல்புல்தான்’’ எனும் நூலில் ஆசிரியர் யார்?
1. இப்னு ஷஹ்ரயார்  2. இப்னுல் அரபி
3. இப்னு ஹிஷாம்  4. அல் பலாதூரி

38. ‘‘ஒரு சேவைத் தொழிலில் ஈடுபடுபவர் தனது சேவை நேரத்தில் வேறு பணிகளில் ஈடுபடுவது
1. கலப்படத்திற்கு சமமானதாகக் காணப்படும்
2. ஏமாற்றாகக் கருதப்படும்
3. அளவை நிறுவை மோசடிக்கு சமமானதாகக் காணப்படும்
4. பதுக்கலுக்கு சமமானதாகக் கருதப்படும்.

39. நபி (ஸல்) அவர்கள் பின்பற்றிய மறைமுக தொடர்பாடல் முறைக்கான உதாரணம்
1. ஸபா மலைக்குன்றில் ஏறிச் செய்த குடும்பத்திற்கான த.ஃவா
2. நேரான பாதையைக் காட்டுவதற்கு தரையில் கோடு கீறி வழிகாட்டியமை
3. காய்ந்த மரத்தை அசைத்து பாவ மன்னிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியமை
4. மதீனாவுக்கு முஸ்அப்(ரழி) அவர்களை தனது தூதுவராக அனுப்பியமை.

40. இலங்கை முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவட்டம் எது?
1. மட்டக்களப்பு  2. அம்பாறை
3. கொழும்பு  4. புத்தளம்

**(40x1= 40 புள்ளிகள்)**

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025
## *இஸ்லாம் - தரம் 11*

### *பகுதி 11*

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

I)

1) வழிகெட்ட அகீதாசார் சிந்தனைப் பிரிவுகள் இரண்டினை குறிப்பிடுக?
2) செல்வத்தோடு தொடர்புடைய இபாதத்கள் இரண்டை குறிப்பிடுக
3) நோன்பு நோற்க தடை செய்யப்பட்ட நாட்கள் இரண்டு தருக?
4) இஜ்மா , கியாஸ் தவிர்ந்த துணை மூலாதாரங்கள் இரண்டு தருக?
5) நிகாஹ் செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள் நான்கு தருக?
6) தொழுகையின் முக்கியத்துவம் தொடர்பாக கூறப்பட்டுள்ள ஹதீஸ் வசனம் ஒன்று குறிப்பிடுக?
7) அலி (றழி) அவர்களுடைய ஆளுமைப் பண்புகள் இரண்டு தருக?
8) இஸ்லாம் அனுமதித்துள்ள கூட்டு வியாபார முயற்சிகள் இரண்டை குறிப்பிடுக?
9) இஸ்லாமிய தொடர்பூடகங்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளுள் இரண்டை குறிப்பிடுக?
10) ''உம்மதன் வஸதன்'' என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(10×2= 20 புள்ளிகள்)

II)

1) ஸாலிஹான அமல் என்றால் என்ன?
2) மனித வாழ்வுக்கு ரிஸாலத் அவசியப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக?
3) ஈமானுக்கும் அமலுக்கும் இடையிலான தொடர்பை சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10 புள்ளிகள்)

III)

1) ஸகாத்தின் பர்ளுகளை குறிப்பிடுக?
2) ஸகாத் முறையாக நிறைவேற்றப்படாத போது ஏற்படும் பாதிப்புகள் மூன்று தருக?
3) ஸகாத்தை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கும் சமூக பயன்கள் ஐந்து தருக?

(2+3+5= 10 புள்ளிகள்)

IV)

1) இஜ்திஹாத் என்றால் என்ன?
2) இஜ்திஹாத் உண்டு என்பதற்கான அல்குர்ஆன் ஆதாரம் , ஹதீஸ் ஆதாரம் ஒவ்வொன்று தருக?
3) ஒரு முஜ்தஹிதிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் ஐந்தைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10 புள்ளிகள்)

V)

1) இலங்கையில் முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய போக்குவரத்துமுறை மற்றும் மருத்துவம் என்பவற்றை குறிப்பிடுக?
2) நபி (ஸல் )அவர்களது காலத்தில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான வரலாற்றை குறிப்பிடுக?
3) நபி (ஸல் )அவர்கள் பகிரங்க பிரச்சாரத்தின் போது எதிர்கொண்ட சவால்கள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக?

(2+3+5= 10 புள்ளிகள்)

VI)

1) மஹர்-வலீமா ஆகிய பதங்களுக்கு இடையிலான வேறுபாடு யாது?
2) விவாக விலக்கின் பிரதான மூன்று வகைகளையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
3) அஜ்னபியான ஆண்-பெண் கலந்துரையாடலின் போது பேண வேண்டிய இஸ்லாமிய வரையறைகள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக?

(2+3+5= 10 புள்ளிகள்)

VII)

எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) உமர் (ரழி) அவர்களது சேவைகள்
2) இஸ்லாத்தின் பார்வையில் நற்பண்பின் முக்கியத்துவம்
3) மஸ்ஜிதுல் அக்ஸா
4) உழைப்பின் முக்கியத்துவம்

(2x5= 10 புள்ளிகள்)